**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS.2/2022

பெயர் : கிருஷ்ணமூர்த்தி (PW1) (Cross )

த/க/பெ. :

தேதி : 18.02.2026

ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

சர்வே எண் 10/1 ல் 8 1/4 செண்ட்க்கு வழக்குபோட்டுள்ளேன். குத்தகை சாகுபடி உரிமை வேண்டும் என்று கேட்டுள்ளேன். 7 வேம்பு, 3 கருவை மரங்கள், 3 ஒதிய மரம், மற்ற குறு மரங்களும் தாவா சொத்தில் உள்ளது. மரங்கள் சுமராக 20 வருட மரங்கள். நெல் பயிர் சாகுபடி செய்யும் வகையில் தாவா சொத்து இல்லை. சீர்காழி DMC ல் OS. 123/2001 சீத்தாராம் என்பவர் தாவா சொத்துதில் தொந்தரவு செய்ததாக வழக்குபோட்டேன் என்றால் சரிதான். முதல் பிரதிவாதியின் தந்தை தான் சீத்தாராமன் என்றால் சரிதான். அந்த வழக்கில் எனக்கு பாதகமாக தீர்ப்பாகி உள்ளது என்றால் சரிதான். மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் மேல் முறையீடு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். AS. 157/2004 என்றால் சரிதான். மேல் முறையீடும் தள்ளுபடி ஆகி விட்டது என்றால் சரிதான். வழக்கின் பிராது நகல் தான் வா.சாஆ. 15. சீத்தாராமன் எதிர் வழக்குரை வா.சா.ஆ. 16. அசல் வழக்கின் தீர்ப்பு வா.சாஆ. 17. மேல் முறையீட்டின் மனு நகல் வா.சாஆ. 18. மேல் முறையீட்டு தீர்ப்பு நகல் வா.சாஆ. 19. சீர்காழி DMC ல் OS. 39/2010 வழக்கை சீத்தாராமன் மீது தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அதுவும் தள்ளுபடி ஆகிவிட்டதால் மீண்டும் வழக்கை கோப்பிற்கு எடுக்க மனு செய்தேன் என்றாலும் அந்த மனுவும் தள்ளுபடி செயயப்பட்டதுஎன்றாலும் சரிதான். அது வா.சா.ஆ. 20. சீத்தாராமன் 01.01.2020 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் இறந்துவிட்டதால் அவர் மகன் மீது இந்த வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். வருவாய் நீதிமன்றத்தில் குத்தகை உரிமை கேட்டு மனு போட்டு அது தள்ளுபடி செய்யப்பட்டது மேல் முறையீடு தாக்கல் செய்துள்ளேன் என்றால் RTR மாற்றக்கூடாது என்று தடை மனுபோட்டுள்ளேன். வருவாய் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீடும் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் நினைவில்லை. தள்ளுபடி ஆகி உள்ளது என்றாலும் அதற்கான நகல் மனு முதல் பிரதிவாதி வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக நினைவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே நான் போட்ட 3 வழக்குகளும் எனக்கு

பாதகமாகி தீர்ப்பாகி உள்ளது என்றாலும் அதில் நான் குத்தகை தாரார் இல்லை என்று தீர்ப்பாகி உள்ளது என்றாலும் அதை மறைத்து புதிதாக இந்த வழக்கு அதே பொருண்மையின் அடிப்படையில் தாக்கல் செயயப்பட்டதால் சட்டபடி செல்ல கூடியது அல்ல என்றால்  சொத்து என் அனுபவத்தில் தான் உள்ளது. வா.சா.ஆ. 1 ல் தாவா சொத்தை தவிர்த்து 2 சர்வே எண்கள் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணம்  3 ஏக்கர் 36 செண்ட் குரியது என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 தாவா சொத்தை பொருத்து பொருந்தாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 3  இந்த வழக்கிற்கு பொருந்த கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 4 முதல் 12 வரையிலான ஆவணங்களும் வழக்கு சொத்துக்கு சம்பந்தப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.  13 வழக்கு சொத்துக்கான புல எண் அதில் குறிப்பிடபடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 14 ம் வழக்கு சொத்துக்கு சம்பந்தமில்லாத ஆவணம் என்றால் சரியல்ல.  மேற்படி ஆவணங்கள் அனைத்தும் 2ம் பிரதிவாதிக்கு சொந்தமான வேறு நிலங்களை பொருத்தஆவணங்கள் என்றால் சரியல்ல. குத்தகை உரிமைதாரர் என்ற விளம்பபுகை  பரிகாரம் வருவாய் நீதிமன்றத்தில் மட்டுமே கேட்க இயலும் என்றாலும் இந்த நீதிமன்றத்தற்கு அதிகார வரம்பு  இல்லை என்றாலும சரியல்ல. குத்தகை உரிமை பதிவேட்டு சட்டத்திற்கு முரணாக தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.  குத்தகை அலுவலகர் உத்தரவிற்கு மேலாக வருவாய் கோட்டாட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர்கள் மட்டுமே மேல் முறையீடு தாக்கல் செய்ய இயலும் என்றால் சரியல்ல. நான் கேட்க கூடிய உரிமைகள் எனக்கு கிடைக்க கூடியது அல்ல என்று வருவாய் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்க தக்கது அல்ல என்றால் சரியல்ல.  தாவா சொத்தில் பயிர் சாகுபடி செய்யபடவில்ல என்பதால் அதில் குத்தகை உரிமை கேட்க இயலாது என்றால் சரியல்ல. வழக்கில் கோரியுள்ள விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் எனக்கு கிடைக்க கூடயது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்து 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்பதால் அவர் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்யவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. சட்டத்திற்கு புறம்பாக முதல் பிரதிவாதி வசம் உள்ள சொத்தை அபகரிக்கும் முயற்சியாக இந்த வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.02.19 16:16:21 +0530